# விழிப்புலன் வலுவிழந்தோரும் தகவல் தொழில்நுட்பவழித் தொடர்பாடலும்: வாய்ப்புக்களையும் சவால்களையும் அடையாளங்காணல்

**ரிலக்ஷனா, ந,. பூங்குழலி, சி,. ரகுராம், சி**
ஊடகக்கற்கைகள் துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
sinthushana97@gmail.com

*தகவல் தொழில்நுட்பங்களின் வளர்ச்சியினால் காலத்துக்கு காலம் தகவல் பரிமாற்றம் மாற்றமடைந்து செல்கின்றதோடு, தகவல் தொடர்பு சாதனங்களின் வருகையும் அதிகரித்துள்ளன. உடனுக்குடன் தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கு தொழில்நுட்ப வளர்ச்சியே காரணம். அதற்கமைவாக முன்பு ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத தொழில்நுட்பங்கள் மேலும் மிக நெருங்கி ஒருங்கிணைந்து வளரும் போது ஒருமித்து உயர்தொழில்நுட்பமாக முன்னேறித் தொழில்நுட்பக் குவிகையாக வளர்ச்சியடைந்துள்ளன. தற்கால உலகிற்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது. உலகில் நாம் அனைவரும் பல்வேறு விடயங்களை பார்த்து இரசிக்கின்றோம். கண்களால் அல்லாது மனதால் இரசிக்கும் இரசனையும் அழகிய மனதையும் கொண்ட கற்பனைக்கும் எட்டாத இருள் சூழலில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றவர்களே விழிப்புலன் வலுவிழந்தோர்கள். இவர்கள் தம்மை நிலை நாட்டுவதற்காகவும், அடையாளப்படுத்துவதற்காகவும், திறன்களை வளர்த்துக் கொள்வதற்காகவும், தகவல்களினைப் பெற்றுக்கொள்வதற்காகவும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் அதிக ஆர்வத்தினைக் காட்டி வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. அவ்வகையில், விழிப்புலன் வலுவிழந்தோர் மத்தியில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த புரிதல் அவர்கள் அவற்றினை பயன்படுத்துவதற்கான காரணங்கள், பயன்படுத்தப்படும் தகவல் தொழில்நுட்பக் கருவிகள், அவற்றுக்கு உதவும் மென் பொருட்கள், அக்கருவிகள் மூலம் கிடைக்கும் வாய்ப்புக்கள் அவற்றினைப் பயன்படுத்தும் முறைமைகள் ஆகியவற்றினை கண்டறியும் பொருட்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவ்வகையில், தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் விழிப்புலன் வலுவிழந்தோர் பல்கலைக்கழக மாணவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், தனியார் தொழில் செய்பவர் கள், சுயதொழில் செய்பவர்கள், இல்லத்தரசிகள் என்போர் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். 50 விழிப்புலன் வலுவிழந்தோர் மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டு அவர்களிடம் தரவு களினைத் திரட்டுவதற்கு அவதானிப்பு, வினாக்கோவை மற்றும் நேர்காணல் முறையியல்கள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. திரட்டப்பட்ட தகவல்களினை பெறுநர் ஆய்வு முறையியலுக்கேற்ப எண்சார்ந்தும், பெறுதிசார்ந்தும் தரவுப்பகுப்பாய்வு மேற்கொள்ளப் பட்டு, ஆய்வின் முடிவுகளாக, விழிப்புலன் வலுவிழந் தோர் தகவல் தொழிநுட்பத்தின் மூலம் அதிகமான வாய்ப்புக்களினைப் பெற்றுக் கொள்கின்றனர் என்பதுடன் தகவல் தொழில் நுட்பம் தொடர்பில் ஓரளவு புரிதலே விழிப்புலன் வலுவிழந்தோரிடம் காணப்படு கின்றமையும், தொடர்பாடல் மேற்கொள்ளல், பொழுதுபோக்கு, மற்றும் அறிவினை வளர்த்துக் கொள்ளல் போன்ற காரணங்களுக்காக அவர்கள் அதிகமாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துகின்றமையும் ஆய்வாளரால்*